# "திருமங்கையாழ்வார் பாடல்களில் பெண்மை மாண்புகள்"

## Embodying Devotion: The Feminine Virtues in the Hymns of Thirumangai Azhwar

**முனைவர் ச. திவ்யபாரதி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேலம் 5, தமிழ்நாடு, இந்தியா.
Email: divyajaganathan8@gmail.com, ORCiD: https://orcid.org/0009-0001-0168-4454

**Dr. C. DIVYABHARATHI,**
Assistant professor in tamil, sona arts and science college, salem 5, tamilnadu, india.

**Abstract:**

Thirumangayavar has portrayed the woman in many angles. That is, he loves the extreme devotion on Tirumal. In addition, Thirumakal and her fame brings people to the people. Tirumala is the one who has all the feminine qualities. That is why Tirumala's breast is qualified to smell. Thirumangal Thirumakal Thirumakkal Thirumakal Thirumangal Thirumangal Thirumangal is known to be admirable. Their children are the best wealth of the parents. It is interesting to note that children's qualification will be according to the parents' foster system. Knowing that her child is an emperor who protects the world, the mother who is concerned with every move is the mother. She also tells her that she is the only one who belongs to her. Such a mind of the subconscious shows his motherhood. Thirumangayavar briefed the world to the world of Thirumul, who is full of his mind. He uses himself as a woman. It is clear that he completely hates femininity through the lines of the subconscious. And her value on women is also revealed. Thirumangayavar songs, titled Feminism, is the ability to express the dignity of the feminine feminine femininity.

**Keywords**: Feminine honor, headship, love, motherhood, devotion

**ஆய்வுச் சுருக்கம்:**

திருமங்கையாழ்வார் பல கோணங்களில் பெண் உள்ளத்தை சித்தரித்துள்ளார். அதாவது திருமால் மீது கொண்ட அதீத பக்தியை காதலாக வெளிப்படுத்துகிறார். அதோடு திருமகளையும், அவளது புகழையும் மக்களுக்கு எடுத்துரைக்கிறார். பெண்மைக்குரிய அனைத்து குணங்களையும் பெற்றவளாக திருமகள் திகழ்கிறாள். அதனால்தான் திருமாலின் மார்பினில் வாசம் புரியும் தகுதியினைப் பெற்றவளக விளங்குகிறாள். இப்படிப்பட்ட திருக்குணங்களை உடைய திருமகளின் திருப்புகழை வெளிப்படுத்துவதன் மூலம் திருமங்கை ஆழ்வாரின் பெண்மையை போற்றும்குணம் பற்றி அறியமுடிகிறது. பெற்றோரின் சிறந்த செல்வமெனச் சிறப்பித்துக் கருதத்தக்கவை அவர்களின் பிள்ளைகளே ஆவார்கள். பிள்ளைகளின் தகுதி, பெற்றோர்களின் வளர்ப்பு முறைக்கேற்ப அமையும் என்பது உற்றுநோக்கத்தக்கது. தன் குழந்தை உலகையே காக்கும் எம்பெருமான் என்பதை அறிந்திருந்தும் அவனது ஒவ்வொரு அசைவிலும் அக்கறை கொண்டவளாய் ஆழ்வார் காட்டும் தாய் விளங்குகிறாள். மேலும் தன்குழந்தை தனக்கு மட்டுமே உரியவன் என்பதையும் மனதில் கொண்டவளாய் அவனை தன்னுடனேயே இருக்குமாறும் கூறுகிறாள். ஆழ்வாரின் இத்தகைய மனவெளிப்பாடு அவரது தாய்மைக் குணத்தைக் காட்டுகின்றது. திருமங்கையாழ்வார் தன் மனதில் நிறைந்திருக்கும் திருமால் மீது கொண்ட காதலை உலகிற்கு எடுத்துரைக்கிறார். அதற்காகத் தன்னை பெண்ணாக பாவித்துக் கொள்கிறார். ஆழ்வாரின் வரிகளில் மூலம் அவர் பெண்ணாசையை முற்றிலும் வெறுக்கிறார் என்பது தெளிவாகிறது.



Kalanjiyam

மேலும் பெண்களின் மீது அவர் கொண்டுள்ள மதிப்பும் வெளிப்படுகிறது. திருமங்கையாழ்வார் பாடல்களில் பெண்மை மாண்புகள் என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வுக் கட்டுரை வாயிலாக திருமங்கையாழ்வார் பெண்மையின் மாண்புகளை வெளிப்படுத்தும் திறம் விளக்கப்படுகிறது.

**முக்கியச் சொற்கள்**: பெண்மை போற்றுதல், தலைவியாக பாவித்தல், காதல், தாயாக பாவித்தல், பக்தி.

**முன்னுரை:**

திருமங்கையாழ்வார் கூறும் பெண்மையில் ஒவ்வொரு ஆணுக்கும் பெண் உணர்வை விளங்கச்செய்யும் என்பது உறுதியாகும். இவர் தலைவியாகவும், தலைவியின் தாயாகவும், எம்பெருமானின் தாயாகவும் தன்னை பாவித்துள்ளார். அதோடு மட்டுமின்றி குறத்தியர்குல பெண்கள் குறித்தும் குறிப்பிட்டுள்ளார். எம்பெருமானிடம் காதல் கொண்ட பெண்களின் புலம்பல்களைக் கண்டு இவர் தன்னை தலைவியாக பாவித்துள்ளார் என்பது இவர் வரிகள் கூறும் சான்றாகும். அப்பெண்களின் புலம்பல்களை உதாசினப்படுத்திச் செல்லாமல், அப்புலம்பல்களுக்கு உயிர் கொடுத்து, உருவம் கொடுத்து, உறவுகளையும் கொடுத்து, அதற்கு ஒரு அர்த்தத்தையும் தந்துள்ளார் திருமங்கையாழ்வார். இவர் பெண்மையைக் குறித்துக் கூறும் ஒவ்வொரு வரியிலும் பெண்மனதைக் காட்டும் கண்ணாடியாக இவர் வரிகள் விளங்குகின்றன.

**ஆழ்வார் கூறும் தலைவியின் காதல் உள்ளம்:-**

திருமங்கையாழ்வார் திருமாலையே எண்ணி எண்ணி உருகும் தலைவியாகவும் காட்சியளிக்கிறார். தலைவியின் உள்ளத்தில் எழுந்த போராட்டத்தை நன்கு உணர்ந்த தாயாகவும் திகழ்கிறார். இதற்குச் சான்றாக,

**‘திவளும்வெண் மதிபோல் திருமுத் தரிவை**
**செழுங்கட லமுதினிற் பிறந்த**
**அவளும்,நின் னாகத் திருப்பது மறிந்தும்**
**ஆகிலு மாசைவி டாளால்’**

நா.தி.பி 1108

என்ற ஆழ்வாரின் வரிகள் அமைந்துள்ளன. இதில் திருமகளை திருப்பாற்கடலில் தோன்றிய அமிழ்தினும் இனியவள், சந்திரனை ஒத்த அழகிய முகத்தினை உடையவள் என பலவாறாக வருணிக்கிறார். பெண்ணாசையால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களால் தனது இளமைக்காலத்தையே வெறுக்கும் ஆழ்வாருக்கு, திருமகளை எண்ணும் போது அமிழ்தை விட இனியவளாகத் தோன்றுகிறாள். இத்தகைய சிறப்புத் தன்மையுடைய திருமகள் திருமாலின் திருமார்பில் குடிகொண்டிருக்கிறாள் என்பதை தெரிந்திருந்தும் அவளையும் கடந்து தலைவியின் காதல் உள்ளம் திருமாலைத் தேடுகின்றது.

**தலைவியும் அவளது தாயும்:-**

தலைவியின் உள்ளத்தை நன்கு புரிந்திருக்கும் தாயாகவும் ஆழ்வார் தன்னை பாவித்துள்ளார். தாய் தன் மகளை குவளை மலர் போன்ற அழகிய கண்களை உடையவள் என்றும் கொல்லிமலையில் தீட்டப்பெற்ற பெண்பாவைப் போன்றவள் என்றும் வருணிக்கின்றாள். மேலும், திருமகள் திருமாலின்

Kalanjiyam

மார்பில் உறைந்திருப்பதைக் கண்ட பின்பும் திருமாலை அடையத்துடிக்கின்ற தலைவியின் உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாக தலைவியின் தாய் திகழ்கிறாள்.

**தலைவியின் மனநிலை:-**

திருமங்கை ஆழ்வாரின் பெண் தன்மை மேல் கொண்ட ஈடுபாடு அவர்தம் வரிகளில் வெளிப்படுகிறது. பெண்ணின் மனநிலைகளைக் குறித்து பாடல்கள் அமைத்துள்ளார். அதாவது காதல் கொண்ட தலைவியின் வாடிய நிலையினை உள்ளத்தை உருக்கும் தனது வார்த்தைகளால் வருணிக்கிறார்.

இதற்குச் சான்றாக,

**'துளம்படு முறுவல் தோழயர்க் கருளாள்**

**துணைமுலை சாந்து கொண் டணியாள்,**

**குளம் படு குவளைக் கண்ணினை யெழுதாள்**

**கோலநன் மலர்குழற் கணியாள்'** நா.தி.பி 1109

என்ற வரிகள் இடம்பெற்றுள்ளன. மாதுளம்பழத்தின் விதைகளைப் போன்ற பற்களைக் கொண்ட தலைவி தன் தோழியர்களிடமும் அமைதிகாக்கின்றாள். அவளது அழகை அதீத படுத்திக்காட்டும் அவள் முலைகளில் சந்தனம் பூசாது நிற்கிறாள். 'திருமாலை எப்போது அடையப் போகின்றோமோ' என்று நினைந்துருகி அவள் கண்களில் கண்ணீர் தேங்கி நிற்கிறது. இதனை,

**"குளங்களிலே பூத்துக்கின்ற குவளைமலர் போன்ற கண்கள்" -**

2ஆம் ஆயிரம் பக்.106

என வருணிக்கிறார். அத்தகைய அழகான கண்களில் மைதீட்டாதவளாய் தலைவி இருக்கின்றாள். மேலும் இவள் தன் கூந்தலில் மலர் சூடாதவளாகவும் கிடக்கிறாள். திருமங்கையாழ்வார் காட்டும் தலைவியின் இத்தகைய தன்மையை ஆண்டாள் நாச்சியார் விரதமாக மேற்கொண்டாள். ஆண்டாளின் திருப்பாவையில் அமைந்த,

**'நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**

**ஐமயிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்**

**செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதம்'**

நா.தி.பி.-திருப்பாவை- பா. 2

என்ற வரிகள் தக்க சான்றாக அமைந்துள்ளன.

**காதலில் இழக்கும் நாணமும், பெண்மையும்:-**

தன்வரிகளில் பெண்களின் மனநிலைகளை வெளிப்படுத்தும் திருமங்கை ஆழ்வார் தன்னை தலைவியாக பாவித்த இடத்தில் தலைவன் மீது கொண்ட காதலால் பெண்மைக்குரிய நாணத்தினையும், பெண்மையையும் இழந்ததாக வரிகள் அமைத்துள்ளார். இதற்குச் சான்றாக,

**'கொல்லையானாள் பரிசழிந்தாள்**

**கோல்வளையார் தம்முகப்பே'**

நா.தி.பி 1321

என்ற வரிகள் அமைந்துள்ளன. இது தலைவியின் தாய் கூற்றாக அமைந்துள்ளது. தன் மனதில் திருமால் பற்றிய எண்ணங்களையே சுமந்து விளங்கும் தலைவி குறித்து அவளது தாய் கூறும் கூற்று சிறப்புவாய்ந்தது. பல வகையான வளையல்களை அணிந்து கொண்டிருக்கும் தலைவி, இதே போல் வளையல்கள் அணிந்த பிற பெண்களின் முன்னே வரம்புமீறி தனியாகச் செல்கிறாள். அவளது செயல்கள் மற்ற பெண்களிலிருந்து தனித்துத் தெரிகின்றது என தலைவியின் தாய் தன் மகளின் நிலை கண்டு தவிக்கிறாள். பெண்ணிற்கு அழகு நாணம். அந்த நாணத்தையும் தலைவி தலைவனுக்காக இழந்துவிட்டாள். இதனால் மற்ற பெண்களிலிருந்து இவள் தனித்துத் தெரிகின்றாள். தலைவியின் இத்தகைய செயலால் அவளது காதல் உன்னதமாக்கி காட்டியுள்ளார்.

**பெண்மையை போற்றும் ஆழ்வார்:-**

அழகான முலைகளை உடைய பெண்கள், எம்பெருமானின் திருவடிகளை அடையும் பொருட்டு, அதனால் ஏற்பட்ட காதலால் புலம்பிய புலம்பல்களின் செயல்பாடுகளை நன்கு அறிந்தவராக தலைவியின் கூற்றை படைத்துள்ளார் திருமங்கையாழ்வார். மேலும் இவர், பெண்கள் தங்களுடைய எண்ணங்களையும் செயல்பாடுகளையும் சமுதாயத்தில் சுதந்திரமாக வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவராக விளங்குகிறார். இதற்குச் சான்றாக,

**"'கச்சு' அணிந்த மென்மையான முலைகளைக் கொண்டுள்ள பெண்கள் கடல் நிறத்தினை உடைய எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப்பெருமானின் திருவடிகளை அடைய ஆசைப்பட்ட, அதனால் உண்டான காதல் காரணமாகப் புலம்பிய புலம்பலின் செயல் பாடுகளை அறிந்து வைத்து, தலைவி கூற்றாக மேகங்கள் சூழ்ந்துபரந்த பசுஞ்சோலைகளைக் கொண்டிருக்கின்ற 'திருமங்கை என்னும் நகர்க்கு மன்னனாகிய 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள்"**

நா.தி.பி. இரண்டாம் ஆயிரம்) பக். 444

என்ற மேற்கண்ட வரிகள் அமைந்துள்ளன. பெண்கள் தங்கள் வாழ்வியல் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், சமூகத்தை எதிர்கொள்ள மனப்பக்குவம் பெறவும் திருமங்கை ஆழ்வாரின் வரிகள் வழிகாட்டியாய் அமைகின்றன.

தன்னுடைய குடும்பம், உறவுகள், குடும்பநலன் என்று குறுகிய வட்டத்திற்குள் கிடந்த பெண்களுக்கு மேன்மை வாழ்வை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார். ஆழ்வார் குறிப்பிடும் பெண்கள் எம்பெருமான் மீது காதல் கொண்டதை வெளிப்படையாக புலம்புகின்ற அளவுக்கு, அதாவது பெண்கள் தங்களது உள்ளத்தின் கருத்தை தைரியமாக ஊர்மக்களுக்கு புலப்படுமாறு புலம்பும் தன்மையால், ஆழ்வார் காலத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட உன்னத தகுதி வெளிப்படையாகிறது. இந்நிகழ்வை மேலும் உயிருட்டமாக்கும் விதத்தில் தான் காதில் கேட்ட காதற்புலம்பல்களை எல்லாம் தலைவி கூற்றாக படைத்துள்ளார்.

**திருமாலின் தாயாக பாவித்தல்:-**

ஆழ்வார் தன்னைத் தாயாகவும் திருமாலைத் தன் குழந்தையாகவும் பாவித்துள்ளார். பெண்மையை உயர்த்திப் பேசும் இவர் பெண்மையின் இலக்கணமாக திகழும் தாய்மையையும் போற்றியுள்ளார். தன்னைத் தாயாக பாவித்த இவர், தன் குழந்தையான திருமாலின் பசியை போக்க

பேண்டும் என்று எண்ணிய உடனேயே அவளது முலைகளில் பால் சுரந்தது என்கிறார். அவ்வாறு வழியும் பாலை உண்ண வருவாயா என்று,

**'….. என் முலைத்தடந் தன்னை**

**வாங்கிநின் வாயில் மடுத்து…..உண்ணாய்'** -

நா.தி.பி. பா.1878

அழைக்கிறார். மேலும் தாய்ப்பாலின் தன்மையையும் விளக்குகிறார். தாய்ப்பால் குழந்தைக்கு நன்மை அளிக்கக் கூடியது என்கிறார். மேலும் தாய்ப்பாலினை 'சேமத்தகளி' என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறார். இதற்குச் சான்றாக,

**'என்னம்மம் சேமுண் ணாயே'** (மேலது)

என்ற வரியானது அமைந்துள்ளது. அதேபோன்று 'ஆகாயத்தில் உள்ள அழகான பிறைச்சந்திரனைப் பிடித்து உன் கையில் தருவேன் என்று கூறி குழந்தையை பாலுண்ண அழைக்கிறாள். ஆகாயத்தில் உள்ள நிலவினை கையில் பிடிப்பது என்பது சாத்தியமற்ற செயலாகும். எனினும் தன் குழந்தைக்காக எத்தகைய செயலையும் சாத்தியமாக்க நினைக்கும் தாயின் முனைப்பும், அக்குழந்தை நலனுக்காக அவள் கூறும் பாசாங்கு வார்த்தைகளும், இவரது தாய்மை பண்பை நமக்கு உணர்த்துகின்றது.

அதேபோன்று மற்றவர்களின் பார்வைபடுதல் என்பதை 'திருஷ்டி' என்கிறோம். குழந்தையின் அறிவான அழகான செயல்கள் மற்றவர்கள் கண்களுக்கு விநோதமாக இருக்கும். அவர்களின் வியக்கும் பார்வை குழந்தையின் மீதுபடின், குழந்தைக்கு தீங்கு ஏற்படுமோ என்று அன்னை பயந்து செயல்படுவாள். அத்தகைய தாயின் தவிப்பைத் தான் ஆழ்வாரும் இங்கே காட்டியுள்ளார். ஆழ்வார் கூறும் குழந்தையோ உலகையே அளந்த எம்பெருமான். எனவே மானிடர்கள் மட்டுமின்றி,

**'வானிடைத் தெய்வங்கள் காண,**

**அந்தியம் போதங்கு நில்வேல்'**

நா.தி.பி.பா. 1885

விண்ணுலகத் தெய்வங்கள் காணுமாறும் நான்கு சந்துக்கள் கூடும் இடமான நாற்சந்தியிலே நிற்கவேண்டாம் என்கிறாள் தாய்.

இதில் ஆழ்வார் திருமாலை உயர்வுபடுத்தியுள்ளார். தாய் யசோதைக்கு தன் குழந்தை உலகைக் காக்கும் எம்பெருமான் என்ற உண்மை தெரியாது. எனவே அவள் அவனது மழலையையும், அவனது குறும்புத்தனங்களையுமே கண்டு மனம் மகிழ்ந்தாள். அவன் மீது கோபமும் அன்பும் கொண்டு சாதாரண குழந்தையாகவே நோக்கினாள். ஆனால் தன்னை தாயாக பாவித்துக் கொள்ளும் ஆழ்வாரோ, இவன் உலகையே அளந்த எம்பெருமான் என்று தெரிந்திருந்தும் தன்னோடு இருக்குமாறு கூறுகிறாள். கடவுளிடம் தீய பார்வைகள் அணுகாது என்பதை அறிந்திருந்தும் ஒரு தாய் என்ற நிலையில் தன் குழந்தையின் நலனில் பயமும் கொள்கிறாள். இது திருமங்கையாழ்வாரின் தாய்மை குணத்தை வெளிப்படுகிறது. இதன்மூலம் தாய்மையை உயர்வுபடுத்தியுள்ளார். இவற்றால் அனைவரின் எண்ணமும் 'குழந்தை' எம்பெருமானை சிந்திக்கத் துவங்குகிறது. இத்தகைய சிந்தனையே வைணவத்தின் மாபெரும் வெற்றியாகும்.



Kalanjiyam

சங்ககாலத்தை அடுத்து வந்த முதலாழ்வார்களின் பாடல்களிலும் திருமங்கையாரின் வரிகளில் காணப்படுவது போன்றே பொதுமைப் பண்பு மேலோங்கி இருந்தது. இதற்குச் சான்றாக,

**'வாய், அவனை அல்லது வாழ்த்தாது'**

மேலது -முதல் திருவந்தாதி- பா.11

என்று போற்றிய பொய்கையார், பிரம்மனும், சிவனும் திருமாலின் உடலில் விளங்குவதாகக் கூறுகிறார். இதனை,

**'மறையான் நின் உந்தியான் மாமதியுள் முன்றெய்த**
**இறையான் நின் ஆகத்திறை'**

மேலது - பா.28

என்ற பாசுர வரிகள் விளக்குகின்றன. மேலும் சித்து, அசித்து ஆகிய பொருள்களைத் தனக்குரிய உடலாகக் கொண்டு அவற்றினுள் உயிராக விளங்குபவன் திருமால் என்னும் கொள்கை கொண்டவர்கள் ஆழ்வார்கள். இதன் அடிப்படையில் பிற தெய்வங்களையும் வழிபாட்டு முறைகளையும் திருமால் அங்கமாகவே போற்றுகின்றனர். இத்தகைய பெருமையுடைய திருமால் தம் அடியவர்களை காத்தல் பொருட்டே இருக்கின்றான். மேலும், அவன் தன்னை நினைப்பவர்களின் மனதைவிட்டு நீங்காமல் நிரந்தரமாக குடியேறிவிடுவான். மேற்கண்ட இக்கருத்திற்குச் சான்றாக,

**'உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து ஊன் கண்டாய்'**

நா.தி.பி. முதல்திருவந்தாதி- பா. 99

என்ற பொய்கையாரின் வரிகள் அமைந்துள்ளன. இதில் இறைவனானவன் அடியார்க்கு எட்டாக் கனியாக இல்லாமல் எல்லோர்க்கும் எளியவனாகவும், தானே வந்து தன் உள்ளத்தில் தங்கியிருக்கின்றான் என்ற கருத்து கூறப்பட்டுள்ளது.

திருமங்கையாரின் பக்தியினைப் போன்றே பேயாழ்வாரும் மற்றும் திருமழிசையாழ்வாரும் சமபக்தி கொண்டிருந்தனர் என்பதற்கு,

**'உளன்கண்டாய் நன்நெஞ்சே! உத்தமனென்றும்**
**உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்-துளன் கண்டாய்'**

மேலது மூன்றாம் திருவந்தாதி- பா. 40

என்ற வரிகள் சான்றுகளாக உள்ளன. பேயாழ்வாரின் இவ்வரிகள் அச்சுப்பிறழாமல்,

**'உளன்கண்டாய் நன்நெஞ்சே! உத்தமனென்றும்**
**உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்-துளன் கண்டாய்''**

மேலது நான்முகன் திருவந்தாதி- பா. 86

திருமழிசையாழ்வார் பாடல் வரிகளில் இடம்பெற்றுள்ளமை தனிச்சிறப்பிற்குரியது. இவ்வாறு அடியார்க்கு எளியவனாய் விளங்கும் இறைவன், அடியார்கள் மனதில் கருதும் உருவத்தைப் பெற்றவன். இதனை விளக்கும் விதமாக,

**'தமர் உகந்து எவ்உருவம் அவ்வுருவம் தானே'**

மேலது முதல் திருவந்தாதி-பா. 44

என்று பொய்கையார் பாடியுள்ளார். ஆழ்வாரின் இக்கருத்தினையே,

**'மனக்கோள் நினக்குஎன வடிவுவேறு இலையே'**

பரிபாடல் - நான்காம் பாடல்- பா. 56

என்று அமைந்த பரிபாடல் வரியும் விளக்குகிறது. எனவேதான், பல உறவுமுறைகளை உயர்நிலைப்படுத்தி, பலவாறாக தன்னை பாவித்துக் கொள்ளும் திருமங்கையாழ்வார் தன்னைத் தாயாக பாவித்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏனெனில் அனைத்து செல்வங்களிலும் குழந்தைச் செல்வமே இல்லத்தில் அழகு சேர்ப்பதாகும். அத்தகைய குழந்தையின் ஆரோக்கியத்திற்காக தாய்ப்பாலின் சிறப்பினையும் நமக்கு எடுத்துரைக்கும் ஆழ்வாரின் மனப்பாங்கு வெளிப்படுகிறது. இதேபோல், குழந்தைகள் நோயின்றி, வாழ்தல் மிகவும் இனிதாகும் என்பதை,

**'குழவி பிணியின்றி வாழ்தல் இனிது'**

நா.தி.பி- இனியவை நாற்பது- பா. 12

என்று பூதஞ்சேந்தனார் விளக்கியுள்ளார். மேலும், குழந்தைகளில் தளர்ந்த நடையினைக் காணுதல் பெற்றோருக்கு இனிதாகும். இவ்வாறே வள்ளுவரும்,

**'தம் பொருள் என்பதாம் மக்கள், அவர்பொருள்**
**தம்தம் வினையான் வரும்'**

குறள் எண். 63

எனக் கூறியுள்ளார்.

**நிறைவுரை**

ஆழ்வார் தன்னை தலைவியின் தாயாக பாவித்துள்ளமை நம்மை மெய்சிலிர்க்கச் செய்வதாக அமைந்துள்ளது. ஏனெனில், தன் மகளின் தவிப்பினை பார்க்கவும் முடியாமல், அதிலிருந்து அவளை மீட்கவும் முடியாமல் அல்லல்படும் ஒரு தாயின் மனப்போராட்டத்தை வரிகளின் மூலம், நமக்குக் காட்சியாக படைத்துள்ளார். மேலும், தன் மகளின் காதலை ஏற்று அவளுக்கு அருள்புரிய தலைவனிடம் வேண்டுகோள் விடுக்கும் தாயே ஒரு கட்டத்தில் தலைவனை எச்சரிப்பதாக அமைந்த வரிகள் புதுமையானவை. திருமங்கையாழ்வார் கையாண்டுள்ள பாவங்களின் வரிசையில் இவர் தன்னைத் திருமாலுக்குத் தாயாக பாவித்துள்ளமை சிறப்பான ஒன்றாகும். ஏனெனில், உலகளந்த எம்பெருமானுக்கே தாயாக விளங்கும் பேறுபெற்றவர் இவர். மேலும், எம்பெருமானாகவே இருப்பினும் அவனது பசியை போக்குவதற்காக, தாய்ப்பால் உண்ண வா! என அழைக்கும் பாங்கு அழகானது. இதில் தாய்ப்பாலின் சிறப்பும், அடம்பிடிக்கும் குழந்தையை சாந்தமாக்கும் திறமும் கூறப்பட்டுள்ளது. இதில் பெற்ற தாயினை உற்ற காலத்தில் பாதுகாப்பதோடு, எப்பொழுதும் அன்பு செலுத்தவும் வேண்டும் என்ற பல கருத்துக்கள் பற்றி திருமங்கையாழ்வாரின் பாசுரங்களின் வழி விளக்கப்பட்டுள்ளன.

**பார்வை நூல்கள்**


1. நாலாயிர திவ்வியப்பிரபந்தம் - டாக்டர் கா.அ மணவாளன்
2. இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார்
3. திருக்குறள் நயவுரை – தங்க பழமலை
4. ஆழ்வார்களின் பெண்மை – டாக்டர் பத்மா விஜயராகவன்
5. அறநூல் - சோ. பரமசிவம்


**Reference Books**


1. Nalayira Divviya prabhandham - Dr. K.A. Manavalan
2. Iniyavai Nalapathu - Bhootanchendanar
3. Thirukkural Nayavurai - Thanga Pazhalamalai
4. Azhwars' Femininity - Dr. Padma Vijayaraghavan
5. Aramnool - So. Paramasivam


**License**


This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.


Kalanjiyam